**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்</u>**

**<u>முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்</u>**

திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம், சித்திரை மாதம் 5 ம் நாள்

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் நாள் சனிக்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.90/2019</u>**

<u>C.N.R.No. TNCB17-000121-2019</u>

G. லீலாவதி, க/பெ. குருசாமி, இந்து, வயது 55,

வசிப்பிடம் கதவு எண்.9, L. G. ஹவுஸ், ஐயர்

லே-அவுட், சிங்காநல்லூர், கோயமுத்தூர் - 641 005. ... **வாதி**

// எதிர்//

1. S. ஹரிசுதன், த/பெ. சௌந்தரராஜன், இந்து, வயது 25,

வசிப்பிடம் பார்வதி அரிசி மண்டி, கோட்டை பழனி சந்து,

திருச்சி ரோடு, சூலூர், கோயமுத்தூர் - 641 402.

2. S. வைஷ்ணவி, த/பெ. சௌந்தரராஜன், இந்து, வயது 28,

வசிப்பிடம் பார்வதி அரிசி மண்டி, கோட்டை பழனி சந்து,

திருச்சி ரோடு, சூலூர், கோயமுத்தூர் - 641 402.

3. S. S. செல்வன், த/பெ. S.P. சுப்பிரமணியம், வசிப்பிடம்

கதவு எண்.19, கோட்டை பழனி சந்து, ஜெய்லானி ஓட்டல்

அருகில், திருச்சி ரோடு, கோயம்புத்தூர் - 641 402.

4. கிருஷ்ணவேணி, க/பெ. முனியப்பன், வசிப்பிடம்

கோட்டை பழனி சந்து, ஜெய்லானி ஓட்டல் அருகில்,

திருச்சி ரோடு, கோயம்புத்தூர் - 641 402.

5. குமார், வசிப்பிடம் கோட்டை பழனி சந்து, ஜெய்லானி ஓட்டல் அருகில், திருச்சி ரோடு, கோயம்புத்தூர் - 641 402. ... **பிரதிவாதிகள்**

(Amended as per order in IA.8/2024 in Dated:21.10.2024)

பிரதிவாதிகள் தாவா சொத்தில் B ஷெட்யூல் சொத்தினை ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டிடத்தினை அகற்ற வேண்டும் என்று உத்தரவிட கோரியும், 4 மற்றும் 5 பிரதிவாதிகள் தாவா சொத்தின் A அயிட்ட சொத்தில் 2'0'' மீட்டர் உயரம் கிழமேலாகவும், 3 அடி அகல தென்வடலாகவும் கட்டி வைத்துள்ள மாடிப்படிக்கட்டினை அகற்ற உத்தரவிட கோரியும், தாவா சொத்தின் A, B ஷெட்யூல் சொத்துக்களை வாதி அனுபவிப்பதை பிரதிவாதிகள் எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா செலவுத்தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(Amended as per order in I.A.No.8/2024 Dated 21.10.2024)

வழக்கு தாக்கலான நாள் : 24.07.2019

வழக்கு மூலம் எழுந்த நாள் 20.10.1997, 25.10.2004, 02.08.2006 சூலூர் இந்நீதிமன்ற அதிகார எல்லை வரம்புக்குட்பட்டது.

நீதிமன்ற கட்டணத்திற்காக வழக்கின் மதிப்பீடு ரூ.2000/- அதற்காக நீதிமன்ற கட்டணங்கள் சட்டம் பிரிவு 27(c)ன் படி ரூ.61/- நீதிமன்ற கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.

<u>**மதிப்பீட்டு விவரம்**</u>

| | | |
|---|---|---|
| செயலுறுத்துக் கட்டளைப் பரிகாரத்திற்காக அதன் நிரந்தர மதிப்பீடு | ரூ. 1,000/- | |
| அதற்காக நீதிமன்ற கட்டணங்கள் சட்டம் பிரிவு 27(c)ன் படி | | ரூ.30.50/- |

| | | |
|---|---|---|
| நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்காக அதன் நிரந்தர மதிப்பீடு | ரூ.1000/- | |
| அதற்காக நீதிமன்ற கட்டணங்கள் சட்டம் பிரிவு 27(c)ன் படி | | ரூ.30.50/- |
| மொத்தம் | ரூ.2000/- | ரூ.61/- |

இந்த வழக்கானது இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.D.சித்ரா, அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக்கியும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்பாணை**

1). பிரதிவாதிகள் தாவா சொத்தில் B ஷெட்யூல் சொத்தினை ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டிடத்தையும், 4 மற்றும் 5 பிரதிவாதிகள் தாவா சொத்தின் A அயிட்ட சொத்தில் 2'0'' மீட்டர் உயரம் கிழமேலாகவும், 3 அடி அகல தென்வடலாகவும் கட்டி வைத்துள்ள மாடிப்படிக்கட்டினையும் 2 மாத காலத்திற்குள் அகற்ற வேண்டும் என்று செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

2). தாவா சொத்தின் A, B ஷெட்யூல் சொத்துக்களை வாதி அனுபவிப்பதை பிரதிவாதிகள் எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

3). செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என தீர்ப்பளிக்கப்படுகிறது.

## செலவு தொகை பட்டியல்

//இல்லை//

(செலவு தொகைப் பட்டியல் இருதரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை)

## சொத்து விபரம்

### A செட்யூல்

கோயமுத்தூர் பதிவு மாவட்டம், சூலூர் துணைப்பதிவு மாவட்டம், சூலூர் வட்டம், சூலூர் கிராமம் க.ச.422/62 நெ நத்தத்தில் (இதன் புதிய சர்வே எண்.860/11) கோட்டை பழனி சந்தில் பழைய 4-வது வார்டு, புதிய 7-வது வார்டில்

| | | |
|---|---|---|
| மீனாட்சியம்மாள் வகையறாவிற்கு பாத்தியப்பட்ட 4 ½ அடி அகலமுள்ள கிழமேல் பொதுத்தடத்திற்கும் | - | வடக்கு, |
| தென்வடல் பொது தடத்திற்கும் | - | கிழக்கு, |
| ரங்கசாமி பண்ணாடி மக்கள் வீட்டுக்கும், காலியிடத்திற்கும் | - | தெற்கு, |
| கோட்டை பழனி சந்து தென்வடல் தடத்திற்கும் | - | மேற்கு, |

இதன் மத்தியில்

| | | |
|---|---|---|
| இருபுறமும் கிழமேலடி | - | 34 (முப்பத்தி நான்கு), |
| இருபுறமும் தென்வடலடி | - | 14 (பதினான்கு), |

இந்தளவுள்ள 476 சதுரடி (நானூற்றி எழுபத்தி ஆறு) சதுரடி விஸ்தீரணம் இடமும்,

பின்னும் ஷை இடத்தையொட்டி வடபுறம் முக்கோண வடிவமாக

| | | |
|---|---|---|
| தென்புறம் கிழமேலடி | - | 34 (முப்பத்தி நான்கு), |
| மேல்புறம் தென்வடலடி | - | 14 (பதினான்கு), |

கிராஸாக வடபுறம் கிழமேலடி - 39 (முப்பத்தி ஒன்பது),

இந்தளவுள்ள 238 சதுரடி (இரநூற்றி முப்பத்தி எட்டு) சதுரடி கொண்ட இடமும், ஆக மொத்தம் 714 (எழுநூற்றி பதினான்கு) சதுரடி கொண்ட இடமும்,

இதிலுள்ள ஷை மேலே சொல்லிய 34 x 14 = 476 அதே சதுரடியில் கிழக்குப் பார்த்துக் கட்டப்பட்டுள்ள ஓட்டு வில்லை வீடும் இதற்குச் சேர்ந்த கதவு நிலவு கட்டுக்கோப்பு முன்பின் வாசல் காலியிடமும்,

ஷை வீட்டில் உள்ள மின் இணைப்பு லைட் & லைன் வகையறாவும் அதன் செக்யூரிட்டி டிபாசிட்டு வகையறாவும், இதன் S. C. நெம்பர் 1633 (பகிர்மானம் (ஊர்) : திருக்கண்ணபுரம்)-ம், ஷை வீட்டிலுள்ள பாத்ரூம் லெட்ரின் வகையறாவும், ஷை வீட்டிற்கு மாமூல் தட பாத்தியமும் சகிதம், ஷை வீட்டில் இன்னும் சிறுவாணி குடிநீர் இணைப்பு ஏற்படவில்லை.

ஷை வீட்டின் கதவு எண்.1, பழைய வார்டு எண்.4, புதிய வார்டு எண்.7, ஷை சொத்து சூலூர் சிறப்பு ஊராட்சி எல்லைக்குட்பட்டது. ஆக 714 சதுரடி இடம், இதில் 476 சதுரடியில் ஓட்டு வில்லை கட்டிடங்கள் ஆகும்.

**B ஷெட்யூல்**

தாவா சொத்தின் A ஷெட்யூல் சொத்து விபரத்திற்குள் அடங்கியதும்,

தாவா A ஷெட்யூல் சொத்தில் தென்புறம் 4 ½

| | | |
|---|---|---|
| அடி அகல கிழமேல் பொது தடத்திற்கும் | - | வடக்கு, |
| வாதியின் மீதமுள்ள சொத்திற்கு | - | தெற்கு, |
| தென்வடல் பொது தடத்திற்கும் | - | கிழக்கு, |
| கோட்டை பழனி சந்திற்கு | - | மேற்கு |

இதன் மத்தியில்,

இருபுறமும் கிழமேல் - 34 அடியும்

இருபுறமும் தென்வடல் - 1 ½ அடியும்

இந்த அளவுள்ள இடத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டிடம் அதனை சேர்ந்த கதவு, கல் மண் முதலியனவற்றை அகற்ற வேண்டியது சகிதம்.

**4, 5 பிரதிவாதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள பகுதி :**

தாவா சொத்தின் A அயிட்ட சொத்திற்குள் அடங்கியதும், தாவா A அயிட்ட சொத்தின் வடபுற அறுதியில் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் உள்ளவாறு 2’0’’ மீட்டர் கிழமேல் உயரம், 3 அடி தென்வடல் அகலம் கொண்ட படிக்கட்டினை அகற்ற வேண்டும்.

(Amended as per order in I.A.No.8/2024 dated 21.10.2024)
(Amended as per order in I.A.No.11/2025 dated 14.08.2025)

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் நாளாகிய இன்று என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சூலூர்.**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

சூலூர், அசல் வழக்கு எண்.90/2019

தீர்ப்பாணை, நாள்: 18.04.2026